# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## O.S. 02/2023

## CNR.No.TNCB19000

| Deposition | : | DW3 |
|---|---|---|
| Name | : | ராஜ்குமார் |
| Father's / Husband's Name | : | பொன்னுசாமி |
| Village / முகவரி | : | சிறுமுகை |
| Taluk / தாலுக்கா | : | மேட்டுப்பாளையம் |
| Age / வயது | : | 43 |

The witness sweared under Oaths Act 1969 on this the day of 17th September 2025

**முதல் விசாரணை**

நான் சிறுமுகையில் வசிக்கிறேன். நான் வழக்கின் பிரதிவாதி தரப்பு சாட்சி ஆவேன். வாதி மற்றும் பிரதிவாதிகளை தெரியும். முதல் விசாரணைக்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். எனது ஆதார் அடையாள அட்டை பி.வா.சா.ஆ.3 அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல்.

**குறுக்கு விசாரணை**

மாறன், இரங்கம்மாள் அவர்களுடைய மக்கள் சுப்பன், பழனிச்சாமி, நஞ்சுக்குட்டி மற்றும் பொன்னுச்சாமி ஆகியோர்கள் குடும்ப சொத்தை பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். 29.06.1988 ஆம் ஆண்டு ஒரு பாக பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரிதான். குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் க.ச.எண்.805/6 காலையில் 4 ஏக்கர் 53 செண்ட் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனக்கு தமிழ் எழுத, படிக்கத் தெரியும் பாகபத்திரத்தை படித்து பார்த்துள்ளேன். பாக பத்திரத்தில் உள்ள வாசகங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். முதல் விசாரணை வாக்குமூலத்தில் 5 வது பத்தியில் க.ச.எண்.805/6 சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

எனக்கு காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 பாக சாசன பத்திரத்தில் க.ச.எண்.805/6 எங்கே

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் வா.சா.ஆ.1 ல் வரவில்லை. நஞ்சுக்குட்டியுடன் பிறந்த சகோதரர்களான எனது தகப்பனார் பொன்னுச்சாமி பெரியப்பா சுப்பன் மற்றும் பழனிச்சாமி ஆகியோர்கள் க.ச.எண்.805/6 காலையில் உள்ள பூமியை பொறுத்து நஞ்சுக்குட்டிக்கு பாகபாத்திய விடுதலை பத்திரம் எழுதி கொடுக்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது அப்பாவும் எழுதி கொடுக்கவில்லை என்றால் அதுவும் எனக்கு தெரியாது.

விவசாயம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சிட்டா, பட்டா யாருடைய பெயரில் உள்ளது என்றால் நஞ்சுக்குட்டி பெயரில் உள்ளது. அடங்கல் என்பது தெரியும், என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.3 மற்றும் 4 ஆகிய ஆவணங்களில் க.ச.எண்.805/6 யாருடைய பெயரில் உள்ளது என்றால் மாறன் பெயரில் உள்ளது. மாறன் என்பவர் எனது தாத்தா, நஞ்சுக்குட்டியின் பெயரில் உள்ள சிட்டாவை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

நஞ்சுக்குட்டியின் பெயரில் 4 ஏக்கர் 53 செண்ட் இருக்கிறதா அல்லது 50 செண்ட் இருக்கிறதா என்றால் 4 ஏக்கர் 53 செண்ட் உள்ளது. மாறன் பெயரில் தான் பட்டா, சிட்டா, அடங்கல் உள்ளது என்றும் நஞ்சுக்குட்டியின் பெயரில் இருப்பதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. யாருடைய சுவாதீனத்தில் உள்ளது என்பதை அடங்கலை வைத்து தெரிந்து கொள்ளலாம் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்பட்ட வா.சா.ஆ.3 மற்றும் 4 அடங்கலின் படி மாறன் சுவாதீனத்தில் தான் க.ச.எண்.805/6 காலையில் உள்ள பூமியில் உள்ளது என்றால் சரிதான்.

காலை எண்.805/6 பூமி ஆனது பாகம் ஏற்படவில்லை என்றும், அதில் மாறன் மற்றும் அவருடைய மக்கள் பொதுவாக பாத்தியப்பட்டது என்றும், எல்லாருடைய பொது சுவாதீனத்தில் இருக்கிறது என்றும், பழனிச்சாமி என்பவர் தனக்குறிய பங்கை பிரித்துக் கொடுக்க கேட்டபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. க.ச.எண்.805/6 ல் நஞ்சுக்குட்டிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது அதனால், நான் பங்கிற்கு வரவில்லை. பாகத்திற்கு தீர்ப்பானால் என்னுடைய பங்கையும் எடுத்துக் கொள்ளலாம் என்றால் எனக்கு பாகமே வேண்டாம்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/- K.Palanivel.

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம் மேட்டுப்பாளையம்.